உ
அன்பே சிவம்

திருக்கோயிலில் நித்திய வழிபாட்டுக்குரியவை

திருப்பள்ளி எழுச்சி வழிபாடு

திருப்பள்ளியறையில் கீழ்வரும் பாடலைச் சொல்லி வணங்கித் திருக்கதவம் திறக்க.

(அ) "பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே."

(அப்பர்-5.10.1)

(ஆ) "அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத் வந்திறப் பிம்மினே."

(அப்பர்-5.10.11)

திருச்சிற்றம்பலம்

திருக்கதவம் திறந்த பிறகு பின்வரும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைச் சொல்லித் துதித்து கற்பூரம் காட்டி இறைவனைப் பல்லக்கில் ஏற்றித் திருக்கோவிலின் உட்பிரகாரத்தில் வலமாகச் சுற்றி வந்து கருவறையில் எழுந்தருளச் செய்து கற்பூரம் காட்டி வழிபடவும்.

இதன்பிறகே கோயிலுக்குள் எந்தவிதமான வழிபாடும் தொடங்குதல் வேண்டும்.

திருப்பள்ளியெழுச்சி

(அதிகாலையில் திருப்பள்ளியறைமுன் பாடவும்)

"போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே."

(திருவாசகம்-8.1.20.1)

"அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே."

(திருவாசகம்-8.1.20.7)

உ

பிள்ளையார் திருமுன்

(அர்ச்சனை)

திருச்சிற்றம்பலம்

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே."

(திருமந்திரம்) 1

"வானுலகம் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைக்கு செய்ய்தமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

(திருத்தொண்டர் புராண வரலாறு) 2

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை." 3

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து." 4

உ

சிறப்பு வழிபாடு காலங்களில் பிள்ளையார் திருமுன் அர்ச்சனை

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன்னரை ஞானும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்கு பொன்முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகமொழி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நிறைந்த கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூர்சிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுத் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிச்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிகளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்தருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேரா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி

மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பினாவி லுணர்த்திக்
குண்டலிய தனிற் கூடிய அசபையில்
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தினுறுப் பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்குமமும்
எண்முக மாக வினிது எனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா வானந் தம்அளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டி
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத் தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணிமுற்றி நின்ற கறும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடிமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தினரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தென்னை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(ஔவையார்)

திருச்சிற்றம்பலம்

சிவபெருமான் முன் பூப்பலியிடுதல்

[அர்ச்சனை]

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே அமர்ந்தய் போற்றி
ஆறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவொயென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3

வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

ஊராகி நின்ற வுலகே போற்றி
ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதெ ன்சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணி னிசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என் சிந்தை நீங்கா விறைவா போற்றி
விண்ணு நிலனுந் தீயானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என் சிந்தை நீங்கா விறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போறி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா வடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி

காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கொன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாத வேதம் உணர்த்தாய் போற்றி
என்னா விலங்கைக் கோன்றன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த வீசா போற்றி
பண்ணாரிசையின் சொற்கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

என்ற பாடல்களைச் சொல்லி மலர் தூவி வழிபடுக.

தூபம் காட்டும்போது

சலம்பூ வொடுதூப மறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலும் உன்னை மறந்ததறியேன்
உன்னா மம்என்னா வில்மறந் தறியேன்

உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

திருச்சிற்றம்பலம்

உணவூட்டல் (நைவேத்தியம் காட்டல்)

ஆலந்தா னுகந்து அமுது செய்தானை
அதியை அமரர் தொழுதேத்துஞ்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தை யுள்ளானை

ஏலவார் குழலாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பெனம் மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

திருச்சிற்றம்பலம்

அடுக்கு விளக்கு காட்டும்பொழுது

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(திருவாசகம்-8.1.29.1)

திருச்சிற்றம்பலம்

ஐந்து விளக்குகள் காட்டும்பொழுது

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

(திருமந்திரம்)

மூன்று விளக்குகள் காட்டும்பொழுது

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சியாவே

(அப்பர்)

தனி விளக்கு காட்டும்பொழுது

உடம்பெனு மனையகத்து வுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் தீரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.

(அப்பர்)

திருச்சிற்றம்பலம்

குடவிளக்கு காட்டும்போது

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

(திருவிசைப்பா)

கற்பூரம் காட்டல்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றமபலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

(பெரிய புராணம்)

சிவாலயத்தில் நடக்கும் வழிபாட்டின் முடிவில் பஞ்சபுராணம் என்று வழங்கும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் ஐந்து நூல்களிலிருந்தும் ஒவ்வொரு பாடலாவது சொல்ல வேண்டும்.

தேவாரம்

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்க்கல் மனுதுக்கோர் வித்து மானாய்
மன்னனாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானாய் யென்னானா யென்னி னல்லால்
ஏழையே னென்சொல்லி யேத்துகேனே.

(அப்பர்)

திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதமே.

பெரிய புராணம்

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித்துள்ள முமோங்கிட
மன்றுளா ரடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

வழிபாட்டில் உள்ள குற்றங் குறைகளை மன்னித்தருள வேண்டுதல்.

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழை யைப்பொருப்பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப்பானை
இன்ன தன்மைய னென்றறி வொன்னா
எம்மா னையெனி வந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூரானை மறக்கலு மாமே

(சுந்தரர்)

திருச்சிற்றம்பலம்

முடிவில் உலகம் நலம்பெற வாழ்த்துக் கூறுதல்

வையம்நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விளங்குக
சைவநன் னெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்க்வே.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

திருமுழுக்காட்டும் காலங்களில் உடையவர் வழிபாட்டில் சொல்லிய பாடல்ளைச் சொல்வதோடு சிவபுராணம் கூறுதலும் வேண்டும்

சிவபுராணம்

நமசிவாய வாஅழ்க நாதன்தான் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
அகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க

புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்தான் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தைவினை முழுதும் ஓயவுரைப் பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்மத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்துருளி
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னி அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீல்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறத தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணை பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணரிவுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

அம்மை திருமுன்

(அர்ச்சனைக்கு)

சுரும்புமுரல் கடிமலர்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு
மடிகள் போற்றி

(திருவிளையாடற் புராணம்)

திருச்சிற்றம்பலம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறி திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி

திருச்சிற்றம்பலம்

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர் சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்

உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும் இள
வஞ்சிக்கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

(மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)

மேற்கண்ட பாடல்களைச் சொல்லி மலர் தூவி அர்ச்சித்தும் பிறகு சிவவழிபாட்டிற் கூறியபடி மற்ற பாடல்களைச் சொல்லி வழிபாட்டை முடிக்கவும்.

அம்பலவாணர், ஆலமர் செல்வர் (தக்ஷிணாமூர்த்தி) முதலிய மூர்த்திகள் சிவமூர்த்தங்களே ஆதலால், சிவபிரானுக்குச் சொல்லியபடியே வழிபாடுகள் செய்யவும்.

முருகன் திருமுன்

(அர்ச்சனை)

அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ போற்றி
ஆல்கெழு கடவுள் புதல்வ போற்றி
மால்வரை மலைமகள் மகனே போற்றி
மாற்றோர் கூற்றே போற்றி
வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ போற்றி

இழைஅணி சிறப்பிற் பழையோன் குழவி போற்றி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ போற்றி
மாலை மார்ப நூல்அறி புலவ போற்றி
செருவில் ஒருவ போற்றி பொருவிறல் மள்ள போற்றி
அந்தணர் வெறுக்கை போற்றி அறிந்தோர் சொல்மலை போற்றி

மங்கையர் கணவ போற்றி மைந்தர் ஏறே போற்றி
வெல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ போற்றி
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ போற்றி
பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே போற்றி

அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருகா போற்றி
நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேரான போற்றி
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய் போற்றி
மண்டு அமர் கடந்தநின் வென்று ஆடு அகலத்துப்

பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள் போற்றி
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள் போற்றி
சூர்மருங்கு அறுத்த மொய்ப்பின் மதவலி போற்றி
போர்மிகு பொருந போற்றி குரிசில் போற்றி
எனப்பல யான் அறி அளவையின் ஏத்தி ஆனது

நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின்
நின் அடி உள்ளி வந்தனன் நின்னொடு புரையுநர்
இல்லாப் புலமையோய் போற்றி
கந்தவேள் அடி போற்றி போற்றி.

(திருமுருகாற்றுப்படை 255-280)

திருச்சிற்றம்பலம்

சிவ வழிபாட்டிற்கு சொல்லிய பாடல்களையே கூறி உணவூட்டி, தூபம், கற்பூரம் முதலியன காட்டிய பிறகு முருகனுக்கு மிக விருப்பமான ஐந்து நூல்களில் ஒவ்வொரு பாடலைச் சொல்லித் துதிக்கவும்.

திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தக ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

கந்தர் அலங்காரம்

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப்
போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான்
றலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருக னுமையான்
பயந்த இலஞ்சியமே

கந்தர் அனுபூதி

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடத்
தானோ பொருளா வதுசண் முகனே.

பிள்ளைத்தமிழ்

பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை ஒழித்துப் பெரு வாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப் பெருமானென்னும் பேராசை
சேரா நிருதர் குலகலகா சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா, தேவர் சிறைமீட்ட செல்வா, வென்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர் பரவிப் புகழ்ந்து விருப் புடனப்
பா ! வா !! வா !! என்றுனைப் போற்றிப் பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ வடிவேல் முருகா வருகவே
வளருங்களபக் குரும்பைமுலை வள்ளிக் கணவா வருகவே !
(திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்)

கந்த புராணம்

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கெசண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞைவாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளிவாழ்க வாழ்கசீர் அடியாரெல்லாம்
திருச்சிற்றம்பலம்

மேற்கண்ட பாடல்களைக் கூறி கற்பூரம் காட்டி வழிபடவும்.

குமர குருபரர் இயற்றிய கந்தர் கலிவெண்பாவில் முருகன் தோற்றம் முதல் முடிவு வரையும் வரும் பின்வரும் பாடல்களைச் சொல்லித் தீ ஓம்புக.

முருகவேள் விழாவில் தீ வளர்க்க

சிறப்பு நாட்களில் வேள்வித் தீ வளர்க்க.

திருச்சிற்றம்பலம்

பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப் பூங்கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி - ஆங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றத விண்ணொர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமும் - தந்து 38

திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப - விரிபுவனம்
எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழற்பிழம்பைப் பொற்கரத்தால் - அங்கண் 39

எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் - அடுத்ததொரு
பூதத் தலைவகொடு போதிஎனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப் - போதொருசற்று 40

அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திருஉருவாய் - முன்னர்
அறுமீன் முலையுண் அழுதுவிளை யாடி
நறுநீர் முடிகணிந்த நாதன் - குறுமுறுவல் 41

கன்னியொடும் சென்று அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும் - தன்னிரண்டு
கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச் - செய்ய 42

முகத்தில் அணைத்து உச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்து அளித்துச் - சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில் அளித்து
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே - கிள்ளைமொழி 43

மங்கை சிலம்பின் மணிஒன்ப தில்தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து - தங்கள்
விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு - நெருப்பிலுதித்து 44

அங்கண் புவனம் அனைத்துஹ்ம் அழித்துலவும்
செங்கண் கிடா அதனைச் சென்று கொணர்ந்து - எங்கோன்

விடுக்குதி என்றுஉய்ப்ப அதன் மீதிவர்ந்து எண்திக்கும்
நடத்தி விளையாடும் நாதா - படைப்போன் 45

அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தென்று
உகந்த பிரணவத்தின் உண்மை - புகன்றிலையால்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும் மோமானே - மட்டவிழும் 46

பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே - கொன்னெடுவேல்
தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீரவடி வேல் விடுத்தோனே - சீரலைவாய்த் 47

தெள்ளு திரை கொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து - வெள்ளைக்
கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்கு இமையோர் வாழச் - சயேந்திரனாம் 48

சூரனைச் சோதித்துவருக என்றுதடம் தோள்விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே - காரவுணன்
வானவரை விட்டு வணங்காமை யால் கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப் - பானு 49

பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய் - சகமுடுத்த்
வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்தநெடும்
சூருடலம் கீண்ட சுடர் வேலோய் - போரவுணன் 50

அங்கம்இரு கூறாய் அடன்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும் - அங்கவற்றுள்
சீறும்அர் வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே - மாறிவரு 51

சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துயர்த்த மோலோனே - மூவர்
குறைமுடித்து விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட் கொண்டளித்த தேவே - மறைமுடிவாம் 52

சைவக்கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றை மணம்செய்தோனே - பொய்விரவு
காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப் - பூமருவு 53

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து - மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே - உள்ளம் உவந்து 54

ஆறுதிருப் பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தைகுடி கொண்டோனே - நாறுமலர்க்
கந்திப் பொதும்பர் எழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே - சந்ததமும் 55

பல்கோடி சன்மப் பகையும் அவமிருந்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் - பல்கோடி
பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும்அடல்
பூதமுந்தீ நீரும் பொருபடையும் - தீது அகலா 56

வெவ்விடமும் துட்ட மிருகம் முதலாம் எவையும்
எவ்விடம் வந்து எம்மை எதிர்ந்தாலும் - அவ்விடத்தில்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் மயில்வேலும் - கச்சைத் 57

திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - விரகிரணம்
சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்திடுக்கண் 58

எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாசமாக உளத்திருந்து - பல்விதமாம்
ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும் இயல் பல்காப் பியத் தொகையும் - ஓசை 59

எழுத்துமுத லாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவா தனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்து 60

ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய
கடியேற்கும் பூங்கமலத் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள். 61

திருச்சிற்றம்பலம்

மேற்கண்டவாறு தீ வளர்த்து வழிபாடு செய்த பிறகு முருகவேளுக்குச் சிறப்புத் திருமுழுக்காட்டி வழிபாடு செய்க.

திருச்சிற்றம்பலம்

நால்வர் திருமுன்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

அறுபத்து மூவர் பெருமக்களும் மணிவாசகரும் சித்தமலம் அறுவித்து சிவமாம்தன்மை பெற்றவர்களாகையால் சிவபூசைக்குக் கூறுகின்ற பாடல்களைச் சொல்லியே வழிபாடு செய்க.

சனீஸ்வரர் நவக்கோள்கள் திருமுன்

(கோளறு பதிகம்)

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2.85.1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள் களவைதாம் 2.85.2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெதி நல்ல்நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.3

மதிநுதல் மங்கையோடு வடவாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்

உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.6

செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.7

வேள்பட விழிசெய்தன்று விடமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.9

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2.85.10

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே 2.85.11

திருச்சிற்றம்பலம்

சண்டேஸ்வரர் திருமுன்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற் கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனாடைகள் பிறவும் வேறுதனக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளுந் தூயோனடித் தாமரை தொழுவாம்

திருச்சிற்றம்பலம்

பைரவர் திருமுன்

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

திருச்சிற்றம்பலம்

பெருவிழாக் காலங்களில் சிறப்பு வழிபாடு

(பாலிகை இட மண் எடுத்தல்)

பெரும் விழாக் காலங்களிலும் குடமுழுக்குக் காலங்களிலும் பிள்ளையார் வழிபாட்டிற்குப் பிறகு புனிதமான இடத்தில் மண் கொணர்ந்து முளைப்பாலிகை போட்டு வளர்த்தல்

வில்வம், வன்னி மரங்களின் அடியிலிருந்து தூய மண் எடுத்து வருதல் (மிருது சங்கரணம்)

1. “பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி”

என்று தூய நிலத்தின் மீது நீரைத் தெளித்து மலர் தூவித் தீபம் முதலியன வழிபாடு செய்து கீழ்வரும் பாடலைச் சொல்லி இறைவன் மண்ணில் கலந்து நிற்கும் தன்மையை நினைந்து மலர்களால் அர்ச்சித்து மண்ணை எடுத்து வருக.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனத தென்ற வரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லொ வாழ்த்துவனே.

திருச்சிற்றம்பலம்

2. முளைப் பாலிகை இடுதல்.

(அங்குரார்ப்பணம்)

(அங்குரம் = விதை; அர்ப்பணம் = இடுதல்)

கீழ்வரும் பாடலைச் சொல்லிக்கொண்டே கொணர்ந்து மண்ணை நீரிட்டுச் சுத்தம் செய்து ஒரு தட்டில் இட்டு சமப்படுத்திப் பிறகு கீழ்வரும் பாடலைச் சொல்லி முன்னரே தண்ணீரில் இட்டு முளை தோன்ற வைத்திருந்த

நவதானியங்களை இட்டு கவனமாகப் பாதுகாத்துப் பாலிகை வளரும்படிச் செய்தல் வேண்டும்.

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாடுங் கொடியானே
(சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

3. கொடியேற்று விழா

சைவ சமய முதற்குரவராகிய திருநந்தித் தேவரைத் துதித்து வணங்கிய பிறகு விடைத் தேவரை வழிபடுக.

1. ஐயிறு புராண நூல் அமலற்கு ஓதியும்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாதனீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்

2. வந்திறை அடியில் தாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள் சிந்தவேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலுந் தொண்டர் அலகிடுங் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைபாம்.

3. வேதநாத முதன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவர் எண்ணிலார் மற்றும்
காதலால் மிடைந்த முதற் பெருந்தடையாம் கதிர்மணிக் கோபுரத்துள்ளான்
பூதவேதாளப் பெருங்கணநாதர் போற்றிடப் பொதுவில் நின்றாடும்
நாதனார் ஆதிவேதனார் கோயில் நாயகன் நந்தியெம் பெருமான்.

திருச்சிற்றம்பலம்

4. கொடியேற்று விழாவில் விடைத்தேவர் துதி

விடை எழுதிய கொடியை பின்வரும் பாடல்களால் மலர் தூவித் துதித்துத் திருக்கோவிலை வலம் வரச் செய்து கொடி மரத்தடியில் வைத்துக் கொடிக் கவி பாடி கொடியேற்றி விழாத் தொடங்குக.

(அ) சடையார்புனல் உடையான்ஒரு சரீகோவணம் உடையான்
படையார் மழுவுடையான் பல பூதப்படை உடையான்
மடமான்விழி உமைமாதிடம் உடையான்எனை உடையான்
விடையார்கொடி உடையானிடம் வீழிம்மிழலையே.
(சம்பந்தர்)

(ஆ) அருகரொடு புத்தரவர் அறியாஅரன் மலையான் மருகன்
வரும் இடபக்கொடி உடையான்இடம் மலரான்
கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்று அடைவோமே
திருச்சிற்றம்பலம்

கொடிக்கவி

கொடியேற்றும் போது பாடவும்.

1. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராது உள்ளுயிர்க்கு உயிராய்
தெளிக்கும் அறிவு திகழந் துளதேனுந்திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும்படிக்கொடி கட்டினனே

2. பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் தெளியேது இரவேது - அருளாளா
நீ புரவா வைய மெலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

3. வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்காது உணர்வரிய தன்மையனை - நோக்கில்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி

4. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசா எழுத்துடனே பேசும் எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

கொடிக்கவி சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்று. இதை இயற்றியவர் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் எட்டு நூல்களை இயற்றிய உமாபதி சிவம் என்னும் பெருமகனாவார். இவர் தில்லைக் கூத்தப் பிரானை வழிபாடு செய்யும் தில்லை மூவாயிரவர் மரபில் தோன்றியவர். ஒரு சமயம் இவர் பெருமை உணராத மற்றைத் தீட்சதர்கள் இவரை ஆசாரக்குறைவுடையவரென்று கூறி அம்பலவாணனை வழிபாடு செய்வதற்கு மறுத்தனர். அடிகளார் கொற்றவன் குடியில் தமது திருக்குடிலில் சிவயோகம் பாவனையில் தவ நிலையில் வீற்றிருந்தார்.

அந்த ஆண்டு ஆதிரை விழாவில் கொரியேற்ற எவ்வளவோ முயன்றும் கொடி ஏற்ற முடியாமற் போயிற்று. முடிவில் மன்னன் முதல் யாவரும் வருந்த

இறைவன் வானொலியாக உமாபதிசிவம் வந்தாலன்றி கொடியேறாது என்று உணர்ந்த பிறகு அரசன் முதல் யாவரும் அடிகள் அடி பணிந்து வேண்ட உமாபதி சிவம் திருக்கோயிலுக்கு எழுந்தருளி மேற்கூறிய கொடிக் கவியைப்பாடிய மாத்திரத்தில் கொடி இறையருளால் தாமே கொடிமரத்தில் ஏறிற்று. அடிகள் பெருமையையும் அம்பலவாணன் அருளையும் யாவரும் போற்றிப்புகழ்ந்தனர். இவர் சைவ சமய சந்தான குரவர்கள் (குருமார்கள்) நால்வரில் ஒருவர்.

திருச்சிற்றம்பலம்

பெருவிழாக் காலங்களில் திருமுழுக்கிற்கு முன்னர் குடநீர் வழிபாடு செய்தல்.

திருமுறை திருக்காப்பிடல்

மார்கழி, சஷ்டியும் சதயமும் கூடிய நாளில் திருமுறைகளை வழிபட்டு பின்வரும் சம்பந்தர் திருப்பாடல்களை சொல்லி மஞ்சள் கயிற்றினால் பன்னிரு திருமுறைகளையும் திக்காப்பிட்டு (கட்டிவைத்து விட்டு) திருவெம்பாவை விழாத் தொடங்குதல் வேண்டும்.

இக்காலத்தில் திருவெம்பாவைப் பாடல்களையும் மந்திரங்களையும் தவிர, மற்ற பாடலையோ திருமுறைப் பாடல்களையோ வழிபாட்டில் சொல்லக்கூடாது என்பது மரபு.

1. சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
   மதுரம் பொழில்சூழ் மறைக் காட்டுறை மைந்தா
   இது நன்கு இறைவைத்தருள் செய்க எனக்குள்
   கதவும் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே
   (இறை - விரைவில்)
2. காழி நகரான் கலைஞான சம்பந்தன்
   வாழிம்மறைக்காடு அனைவாய்ந்து அறிவித்த
   ஏழின் இசைமாலை யிரைந்து இவைவல்லார்
   வாழி உலகோர் தொழவான் அடைவாமே

(சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

திருமுறை திருக்காப்பு நீக்கல்

திருக்காப்பிட்டு பத்தாவது நாள் திருஆதிரை விழாத் தொடங்கும் முன் கீழ்வரும் அப்பர் பாடலைச் சொல்லி திருக்காப்பு நீக்கி வழக்கம் போல் வழிபாடு தொடங்குதல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

1. பண்ணிநேர் மொழியால் உமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய்ம் மறைக்காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகக் திறந்தருள் திறந்து அருள் செய்ம்மினே

2. அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானீரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கதவந் திறப்பிம்மினே

(சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ வழிபாடு

சிவ வேள்வி நடத்துகின்றவர் ஆன்மார்த்த வழிபாடு முடித்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும்.

குடம் நிறுவுதல் (கலச தாபனம்)

1. வாழை இலையின் மீது அரிசியைப் பரப்பி நூல் சுற்றிய திருக்குடங்கள் இரண்டில் தூயநீர் நிரப்பி மாவிலை செருகி தேங்காய் வைத்து மலர்சூட்டி சிவ குடத்திற்கு வெள்ளை ஆடையும், சத்தி குடத்திற்கு சிவப்பு ஆடையும் சாத்தவும்.

2. குடத்திற்கு அருகில் இலையின் மீது மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்துக்கொண்டு பிள்ளையார் வழிபாடு செய்தல் வேண்டுதல்.

3. வழிபாட்டிற்கு இறைவன் துணை நின்று அருள வேண்டும்.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்திங்கட் சடையானைத் தொடந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பேற்றேனானே.

(அப்பர்)

இறைவனை குட த்திற்கு எழுந்தருளச் செய்தல்

(ஆவாகனம்)

சேர்த்த கைகளை குடலைபோல் விரித்துப் பிடித்து இரண்டு கைகளிலும் மலரை எடுத்துச் சிரசிற்கு மேல் கைகளை உயர்த்தித் துவாத சாந்தப் பெருவெளியில் விளங்கும் இறைவனைக் கைகளிலுள்ள மலர்களின் மூலம் புருவமத்தி, உள்ளம் முதலிய தியான இடங்களுக்கு இறைவன் இறங்கி திருக்குடத்தில் எழுந்தருளுவதாகப் பாவித்து கீழ்வரும் பாடலைச் சொல்லி சிவகுடத்தில் மலர்களைச் சொரியவும்.

மாறி நின்றென்னை மயக்கிவிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்(து) அமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.
திருச்சிற்றம்பலம்.

திருக்குடத்தில் சக்தியை எழுந்தருளச் செய்தல்

மீண்டும் முன்னற் கூறிய வண்ணம் மலர்களைக் கையில் எடுத்துத் திருவருளாகிய பராசக்தி குடத்தில் எழுந்தருளுவதாகக் கீழ்வரும் பாடலைச் சொல்லி மலர்களைச் சக்தி குடத்தில் மீது சொரியவும்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர் சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும் இள
வஞ்சிக்கொடியே வருகவே

மலயத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.
(மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)
திருச்சிற்றம்பலம்

சிவம் சக்தி இருவருக்கும் அர்க்கியம், ஆசமனம் பாத்யம் கொடுக்கவும் (நீர் தெளித்து நீர் அருந்தச் செய்யவும்)

அர்க்கியம் கொடுக்கும்போது பாடவும்

தோடொரு காதனாகி யொருகாதிலங்கு சுரிசங்கு நின்று புரளக்
காடிடமாக நின்று கனலாடும் எந்தையிடமய காதனகர்தான்
வீடுடன் எய்துவார்கள் விதியென்று சென்று வெறிநீர் தெளிப்பவிரலால்
நாடுடனாடு செம்மை யொலிவெள்ள மாரு நனி பள்ளி போலுநமர்காள்
(சம்பந்தர்)

வழிபாடு முடியும் வரை இறைவனும் இறைவியும் திருக்குடங்களில் எழுந்தருளி இருக்க வேண்டுதல்:

திருச்சிற்றமபலம்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
யியமான னாயேறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுஞ் சுற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுத் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.
திருச்சிற்றம்பலம்

"அண்ணலே எனை ஆண்டுகொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந் தருள்புரிவேத நாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின் கோலம்
நண்ணி நான் தொழ நயந்தருள் புரி எனப் பணிந்தார்

பூப்பலியிடுதல் (அர்ச்சனை)

திருக்குடத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானையும், சிவசக்தியையும் நித்திய ஆலய வழிபாட்டில் சொல்லியபடி மலர் தூவி அர்ச்சித்து உணவூட்டி, தூபம், தீபம், கற்பூரம் காட்டி வழிபாடு செய்த பிறகு, பன்னிரு திருமுறைகளிலிருந்து ஒவ்வொரு பாடலவது சொல்லித் துதிக்கவும்.

வேள்வித் தீ வளர்த்தல்

திருக்குடங்களுக்குக் கற்பூரங் காட்டிய சுடரைக்கொண்டு வேள்வி மேடையில் உள்ள சமித்துக்களைப் பற்றச்செய்து கீழ்வரும் பாடல்களைச் சொல்லி நெய் சொரிந்து தீ வளர்க்கவும். அதுபோது நாள் கோள் நலிவகற்ற முன்னர் கூறிய கோளறு பதிகம் ஓதி வழிபாட்டை முடித்துத் திருக்குடங்கள் இரண்டையும் திருக்கோயிலை வலமாகக் கொணர்ந்து திருமுழுக்காட்டி உள்ள அந்தந்த மூர்த்திகளின் மீது திருக்குடங்களிலுள்ள நீரைச் சொரிந்து பின்னர் ஆடை அணிகளால் மூர்த்திகளை அழகு செய்து முன்னற் கூறியபடி மலர் தூவி அர்ச்சித்து வழிபாடு செய்து முடிக்கவும்.

சிவ வேள்வி

தீ வளர்க்கக் கீழ்வரும் பாடல்களைச் சொல்லி வேள்வி நடத்தவும்.

ஆடகமதுரை அரசே போற்றி
கூடலிலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னாருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக்கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவா போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையே போற்றி அணுவே போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க்கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர்(வு) இறந்த வொருவ போற்றி
விரிகடலுலகின் விளைவே போற்றி
அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகிலாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பத் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்தவாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணாரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி

ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவருக்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தெ னடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதே நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தறியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயே னடியேன் போற்றி
இலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழு குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்துச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி

பேராயிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அருகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாத்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ ரானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சய சய போற்றி.

(திருவாசகம் - போற்றித் திருவகவல்)

திருச்சிற்றம்பலம்

கந்தர் சஷ்டி முதலிய சிறப்பு நாட்களில் முருகனுக்குச் சிறப்பு வழிபாடு செய்யும்போது செய்ய வேண்டுவன.

ஒரு உயர்ந்த மேடை மீது வாழை இலைகளைப் பரப்பி அதன் மீது பச்சரிசியை பரப்பி அறுகோணத்தை வரைந்து முருகனின் ஆறெழுத்தை அமைத்து சிவபூசைக்குச் சொல்லிய வண்ணம் நூல் சுற்றிய திருக்குடத்தில் புனித நீரை நிறைத்து மாவிலை செருகி தேங்காய் வைத்து ஆடை அணிகளால் அணி செய்து, பரப்பிய அரிசியின் அறுகோணத்தின் மத்தியில் வைக்கவும். மற்ற கோணங்களில் மற்ற ஐந்து முகங்களுக்காக ஐந்து சிறுகலசங்களுக்கு நூல் சுற்றித் திருக்குடத்திற்கு அமைத்தது போலவே செய்க.

ஐமுகச் சிவனும் இறைவனே அறுமுகச் சிவனாம் முருகவேளாக அடியாருக்கு அருள் புரிய வருகின்றானாகையால் சிவ வழிபாட்டிற்குச் செய்தபடியே முதலில் பிள்ளையார் வழிபாடு செய்த பிறகு முருக வேளைப் பரவெளியிலிருந்து திருக்குடத்திற்கு எழுந்தருளச் செய்யும்போது கீழ்வரும் பாடலைச் சொல்லி மலர்களைத் தூவவும்.

முருகனை திருக்குடத்திற்கு எழுந்தருளச் செய்தல்.

(ஆவாஹனம்)

பேரா தரிக்கும் அடியவர் தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும் பிள்ளைப் பெருமானென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா சேவற்கொடியாய் திருச்செந்தூர்த் தேவா
தேவர் சிறைமீட்ட செல்வா யென்றுள் திருமுகத்தைப்
பாரா மகிழ்த்து முலைத்தாயர் பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாஎன் றுணைப்போற்றிய பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளிக் கணவா வருகவே
திருச்சிற்றமபலம்

அவன் ஆறுமுகங்களுக்குக் கீழ்வரும் ஆறு பாடல்களால் துதிக்கவும்

1. குன்றம் எறிந்தாய் குறைகடலில் சூர்தடித்தாய்
புந்தலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத் துறை.

2. உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

3. உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின் செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

4. அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல் எனவேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்றோருவார் முன்.

5. முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகை முகன்
தமியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

6. காக்கக் கடவிய நீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

இதன் பிறகு நித்திய ஆலய வழிபாட்டில் கூறி உள்ளபடி 'அறுவர் பயந்த ஆறமர் செல்வ போற்றி' என்று தொடங்கும் தமிழ் மறையில் அர்ச்சிக்கவும்.

பிறகு சிவ வழிபாட்டிற்கு சொல்லிய பாடல்களையே கூறி உணவூட்டி, தீபம், கற்பூரம் முதலியன காட்டிய பிறகு முருகனுக்கு மிக விருப்பமான நூல்களாகிய திருப்புகழ், அநுபூதி, கந்தர் அலங்காரம், முருகன் பிள்ளைத் தமிழ், கந்த புராணம் முதலிய ஐந்து நூல்களிலிருந்து ஒவ்வொரு பாடலைச் சொல்லித் துதித்து வாழ்த்துப்பா கூறி வழிபாட்டை முடிக்கவும்.

திருச்சிற்றம்பலம்

வாழ்த்துப்பா

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்
